# இலங்கைக்கான சமூகப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைச் சுருக்கம் : இந்நெருக்கடிக்கான முற்போக்கானதும் பால்நிலை கூருணர்வுடனானதுமான பதில்நடவடிக்கை

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமமானது, மக்களின் வாழ்க்கைமீது இந்நெருக்கடியின் தாக்கங்களை சிறந்தமுறையில் புரிந்துகொள்வதற்கும், பொருளாதார நெருக்கடி சூழமைவில் சமூகப்பாதுகாப்பிற்கான பொருத்தமான வடிவத்தினை அடையாளம் காண்பதற்கும், இலங்கையின் சமூகப் பாதுகாப்பு கொள்கைகள் தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டது. இக் கொள்கைச் சுருக்கமானது, பால்நிலை தொடர்பான கூருணர்வுடைய சமூகப்பாதுகாப்புத் திட்டத்திற்கான கண்ணோட்டத்தினையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றது.

சமூகப் பாதுகாப்பிற்கான அனைவரையும் உள்ளடக்கிய, சரவஜன அணுகுமுறைகள் மற்றும் அவற்றினை உரிமையாக அங்கீகரித்தல் போன்றவை உலகளாவியரீதியில் சிறந்த பெறுபேறுகளை அளித்திருக்கின்றன. இலங்கையும், சுதந்திரத்தினைப் பெற்றுக்கொண்ட பின்னரான ஆரம்பகால தசாப்தங்களில் அரசினால் வழிநடாத்தப்பட்ட வலுவான சர்வஜன சமூக நலன்புரிக் கொள்கைகள் மற்றும் சமூக முதலீடுகளின் காரணமாக, அதனது மனித அபிவிருத்திச் சுட்டிகளில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை பதிவுசெய்திருந்தது. அண்மைக் காலங்களில், பொது நிதியினைக் குறைத்தல், குறுகியதாக வரையறைசெய்யப்பட்ட சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் தனியார்மயப்படுத்தல் போன்றவற்றினூடான சந்தையினை மையமாகக்கொண்ட கொள்கைகளின் செல்வாக்கின்கீழ் சமூக நலன்புரி சிதைவடைதலானது, குறிப்பாக இப்பொருளாதார அதிர்ச்சிகளின்போது இலங்கையர்களை நலிவுற்றநிலையில் விட்டுச்சென்றிருக்கின்றது.

கோவிட் -19 பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் வறுமையினை இருமடங்காக்கியிருக்கின்றன, அசமத்துவங்களை அதிகரித்துள்ளன அத்துடன் தீவிரமான உணவு மற்றும் போசாக்கு நெருக்கடியினையும் விளைவாக்கியுள்ளன. சிக்கனத்தினை அடிப்படையாகக்கொண்ட மீட்புத்திட்டங்கள் உயிர்வாழ்வதற்கான அடிப்படைத்தேவைகளின் செலவுகளையும் அதிகரித்து, வீட்டுக்கடன்களின் நிலையினையும் மோசமடையச்செய்துள்ளன. போதியளவிற்கு அரச பாதுகாப்பின்றி மக்கள் வாழ்வாதாரத்தினை இழந்துள்ளார்கள், வருமானத்தில் குறைவினை எதிர்கொண்டுள்ளார்கள், அத்துடன் பாரியளவில் வாழ்க்கைச்செலவு அதிகரித்த நிலைமையில் அவர்களது உழைக்கும் திறனினால் உயிர்வாழ்வதனை நிலைநிறுத்திக்கொள்ள முடியாதநிலையில் உள்ளனர். உணவுப்பாதுகாப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை எதிர்கொள்வதற்குத் தவறியமையானது, சிறுவர்கள் மத்தியில் போசாக்குக்குறைபாடு ஏற்படுதல் உள்ளடங்கலாக தீவிரமான நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட, குறுகிய நோக்குடைய மீட்புத் திட்டங்கள் வெளிப்படையாகவே தொழில்புரியும் ஏழைமக்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினர் போன்றோருக்கு தீவிரமான துயரத்தினை ஏற்படுத்துகின்றன.

சிக்கனப்படுத்தல் திட்டங்களின் தாக்கங்களை மட்டுப்படுத்த உதவும்முகமாக, சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளாக முன்மொழியப்பட்டு உலக வங்கியினால் வடிவமைக்கப்பட்ட ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமானது, வினைத்திறனான முறையில் பிரச்சினையினை எதிர்கொள்ளவில்லை, அத்துடன் அது தீங்கினையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. 2023 மார்ச்சில் முடிவுசெய்யப்பட்ட முன்மொழியப்பட்ட அஸ்வேசும நலன்புரி நன்மைகளுக்கான கொடுப்பனவுத்திட்டத்திற்கு பயனாளிகளை அடையாளம்காண்பதற்கான சரிபார்க்கும் செயன்முறையானது, மிதமிஞ்சிய கண்காணிப்பு மற்றும் தகவல் திரட்டுதலினை உள்ளடக்கியிருந்தது, இது அச்சத்தினை ஏற்படுத்தியதுடன், சமூக ஒருங்கிணைப்பின்மையினையும் தீவிரப்படுத்தியது, தீவிரமாக நலிவுற்ற நிலையில் காணப்படும் மக்களுக்குத் தீங்கிழைப்பதற்குத் தயார்நிலையில் இருப்பதாகவும் தோற்றமளிக்கின்றது. பயனாளிகளை விரிவுபடுத்துவதற்குப்பதிலாக, பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் வடிவமைக்கப்பட்ட கருத்தாய்வு நிபந்தனைகளை உள்ளடக்குகின்ற, கவனக்குறைவான அணுகுமுறையின்மூலம் மக்கள், வெளித்தள்ளப்படுகின்றார்கள். உதாரணமாக, இச்செயன்முறையானது உணவுப்பாதுகாப்பு, அடிப்படையான போசாக்குத் தேவைகளைப் பூர்த்திசெய்தல் போன்றவற்றினை உறுதிப்படுத்துவதற்கான இயலுமையினை மதிப்பிடுவதற்குத் தவறுகின்றது, அத்துடன் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற குடும்பங்களின் கடன்களையும் கருத்தில் கொள்ளத்தவறுகின்றது.

மேலும், இது 'அத்தம கியமு அத்தம அயட பிரதிலாப தெமு' (நேர்மையாக இருப்போம் - உண்மையிலேயே தேவையுடையவர்கள் நன்மையடையட்டும்) எனும் ஆதரித்துவாதாடலுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது, சமூக பாதுகாப்புத் திட்டங்களின் பயனாளிகளை நேர்மையற்றவர்களாகவும், சோம்பேறிகளாகவும், சூழ்ச்சி செய்பவர்களாகவும் வெறுக்கத்தக்க குணாம்சம் கொண்டவர்களாகவும்

தொழில்புரியும் ஏழைமக்கள் தொடர்பில் மிகையாகப் பொதுமைப்படுத்தப்பட்ட நம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றது. இலங்கையிலுள்ள தொழில்புரியும் ஏழைகளில் அநேகமானோர் பெண்களே என்பதனைக் கருத்தில்கொள்ளும்போது, அத்தகைய எதிர்மறையான பிரச்சாரங்களின் பிரதான இலக்காகவும் பெண்களே காணப்படுகின்றனர்.

இலங்கையர்கள் எதிர்கொள்ளும் திரளான வறுமையாக்கத்திற்கு அரசாங்கத்தின் பதில்நடவடிக்கையானது, பாரியளவில் போதாமையுடையதாக இருப்பதுடன், எதிர்மறையான சமூகத் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. சமூக பாதுகாப்பிற்கான பதில்நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் உள்ளூர் தேசிய மொத்த உற்பத்தியின் 0.6% மட்டுமே ஒதுக்கப்படுகின்றது. இலக்குவைக்கப்பட்ட திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதானது, மிகவும் நலிவுற்றவர்களை உள்ளடக்காது புறக்கணிப்பதுடன், சமூக முரண்பாட்டிற்கான நிலைமைகளையும் உருவாக்குகின்றது.

**பரிந்துரைகளின் சுருக்கம்**

பொருளாதார நெருக்கடியின் மத்தியில் இலங்கையர்களின் வறுமையாக்கத்தினை போதுமானளவிற்கு எதிர்கொள்கின்ற பால்நிலை கூருணர்வுடனான சமூகப் பாதுகாப்பு திட்டமானது அவசரமான முன்னுரிமையாக இருக்கவேண்டும். பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாத குழுமம் பின்வருவனவற்றைப் பரிந்துரைசெய்கின்றது:

**உடனடி உதவி**

நிதிக் கொடுப்பனவிற்கான பயனாளிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும், அத்துடன் நிதிக்கொடுப்பனவானது அர்த்தமுள்ள தொகைக்கு உயர்த்தப்படவேண்டும்.

உணவு விநியோகத் திட்டம், பாடசாலை மதியநேர உணவுத்திட்டம், மானிய அடிப்படையிலான உணவிற்கான விலைகள் மற்றும் போசாக்கு தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கான ஒரு திட்டம் போன்றவற்றின்மூலம் உணவுப் பாதுகாப்பின்மையானது எதிர்கொள்ளப்பட வேண்டும்.

வேலைவாய்ப்பற்றோர், குறைந்த வருமானத்தினைப் பெறுவோர் அல்லது சமூகப்பாதுகாப்புத்திட்டங்களில் வாழ்வோர் போன்றோரின் குடும்பங்களின் கடன் கொடுப்பனவுகள் தொடர்பில் காலதாமத கடன்மீளளிப்பு அனுமதியினை வழங்குதல்

**சர்வஜன சமூகப் பாதுகாப்புக்களுக்கான திட்டம் (இலங்குவைக்கப்பட்ட திட்டங்களிலிருந்து விலகுதல்)**

சமூக நலன்புரி தொடர்பான அரசசெலவினை அதிகரித்தல்

பராமரிப்பு வேலைகளை அங்கீகரித்தல்

இலங்கையின் இலவச சுகாதார மற்றும் இலவசக்கல்விக் கொள்கைகளில் முதலீடு செய்தல்

நீதியான ஊதியங்கள், பாதுகாப்பான தொழில் நிபந்தனைகள் மற்றும் பெண்களின் உழைப்பிற்கான சமூகப் பாதுகாப்பு

**சமூகப்பாதுகாப்பு கொள்கைகளை குடியுரிமை, தொழில்வாய்ப்பு மற்றும் சமூகத்தினை அடிப்படையாகக்கொண்ட சிறப்புரிமைகளாக கட்டமைத்தல்**

சமூகப் பாதுகாப்பு பயனாளிகளை ஏழைகளாகவும், சோம்பேறிகளாகவும், பொய்கூறுபவர்களாகவும், உற்பத்தித்திறனற்றவர்களாகவும் அரசியல் மற்றும் பொதுவெளிகளில் கட்டமைப்பதனை உடனடியாக நிறுத்துதல். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நாட்டிலுள்ள வறுமை மற்றும் அசமத்துவதற்திற்கான குடியுரிமை, தொழில்வாய்ப்பு மற்றும் சமூகத்தினை அடிப்படையாகக்கொண்ட சிறப்புரிமைகளாக மீள்கட்டமைப்புச் செய்தல். சமூகப் பாதுகாப்பு பயனாளிகளுக்கு மனித கௌரவத்தினை உத்தரவாதமளித்தல். முறைசாராத் துறையினைச் சேர்ந்த தொழிலாளர்களாக, பராமரிப்புத்தொழில் மேற்கொள்பவர்களாக, தொழில்புரியும் மக்களாக பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பினை அங்கீகரித்தல்.

பெண்கள், சமூக நலன்புரி பயனாளிகள் போன்றோரினதும், நலிவுற்ற மக்கள் குழுக்களினதும் ஆலோசனையினைப் பெறல்: மிகவும் பாதிக்கப்பட்டவர்களுடன் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான உரையாடல்களின் ஒரு பகுதியாக மட்டுமே வினைத்திறனான சமூகப்பாதுகாப்புத்திட்டங்கள் உருவாக்கப்பட முடியும்.

சமூகப் பாதுகாப்புத்திட்டங்களின் தகவலறியும் உரிமையினையும் வெளிப்படைத்தன்மையினையும் உறுதிப்படுத்துதல்

சமுர்த்தி சேமிப்புக்கள் தொடர்பில் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை

சமூகப் பாதுகாப்பு பயனாளிகள் தொடர்பான தரவுகளுக்கான இரகசியத்தன்மையினைப் பேணுதல் மற்றும் தரவுப் பாதுகாப்பு

**சமூகப் பாதுகாப்பு என்பது ஒரு உரிமை அத்துடன் இது அனைத்து மக்களுக்குமானதோர் கடப்பாடு**

சமூகப் பாதுகாப்பு என்பது ஒரு உரிமையாகும், அனைத்து குடிமக்களுக்கும் உரித்துடைய, அவர்கள் அதிலிருந்து நன்மைபெறவேண்டிய ஒரு சமூக மற்றும் பொருளாதார தேவையாகும். அத்துடன் ஒரு நாட்டின் பொருளாதாரக்கொள்கைகளுடன் பிரிக்கமுடியாதளவிற்கு அது இணைந்து காணப்படுகின்றது. சமூகப்பாதுகாப்பானது, குடிமக்களுக்கும் அரசிற்கும் இடையிலான சமூக உடன்படிக்கையின் அடிப்படையான உத்தரவாதத்தினை உருவாக்குகின்றது. சமூகப்பாதுகாப்பிற்கான உரிமையானது, மக்கள் தமது வாழ்க்கையில் தாமாக உழைத்து உயிர்வாழ்வதற்கான அடிப்படைத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான திறனை இல்லாமற்செய்யும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளக்கூடும் என்பதனை அங்கீகரித்து அனைத்து மக்களுக்குமான மனித கௌரவத்தினை உத்தரவாதப்படுத்துகின்றது. சமூக உள்வாங்குதல் மற்றும் மனித கௌரவம் போன்றவற்றினை மேலுயர்த்தும் அதேவேளை, வறுமை மற்றும் அசமத்துவம் போன்றவற்றினை எதிர்கொள்வதற்கான ஒரு கொள்கையாகவும் சமூகப் பாதுகாப்பானது பயன்படுத்தப்படலாம். எனவே, சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள், சமூகப்பாதுகாப்பு உரிமையினை உறுதிப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுக்கொள்கைசார் நடவடிக்கைகளே ஆகும்.

உலகளாவியாரீதியாக, வறுமையினை மதிப்பீடு செய்வதனை அடிப்படையாகக்கொண்ட இலக்குவைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு திட்டங்கள், சர்வஜன அணுகுமுறைக்கு எதிராக, உள்ளடக்கப்படவேண்டிய மக்களை புறக்கணிக்கின்றன, சமூகக்களங்கத்திற்குட்படுத்துகின்றன, அத்துடன் ஒப்பீட்டளவில் அதிகப்படியான நிர்வாகச் செலவுகளையும் கொண்டிருக்கின்றன என ஆய்வுகள் காட்டுகின்றன. சர்வதேச மன்னிப்புச் சபையானது, சர்வஜன சமூகப் பாதுகாப்புத்திட்டங்கள், அனைத்து மக்களுக்குமான சமத்துவமான அணுகுதலினை வழங்குவதுடன், வறுமைக்கெதிராகவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கும் நல்வாழ்விற்கும் ஏற்படக்கூடிய அபாயங்களிலிருந்தும் அவர்களது வாழ்நாள்முழுவதும் பாதுகாப்பு வழங்குவதாக அங்கீகரிக்கின்றது. சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையானது, மேலும், அது 'சிறுவர் நலன்கள், தாய்மை/தந்தையாதல், மாற்றுத்திறன், தொழில்சார் காயங்கள் அல்லது தொறிலற்றிருப்போர் போன்ற தொழில்புரியும் வயதிலுள்ளோருக்கான ஆதரவினை வழங்குதல் மற்றும் வயதுமுதிர்ந்த அனைவருக்கும் ஓய்வூதியம்' போன்றவற்றினையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் எனக்குறிப்பிடுகின்றது.

வறுமையிலிருந்து விடுபடுவதற்கான வழியாக உள்வாங்குதலுடன்கூடிய, சர்வஜன அணுகுமுறையானது சிறப்புரிமைகளை, குடியுரிமை, தொழில்வாய்ப்பு, சமூகம் மற்றும் சந்தை போன்றவற்றின் பால்நிலை தொடர்பான கவனத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. முற்போக்கான சமூகபாதுகாப்பு கொள்கையில் ஊதியம் வழங்கப்படாத மீளுற்பத்திப் பணி உள்ளடங்கலாக பால்நிலைசார் தொழிற் சந்தைகளின் தாக்கங்கள் மற்றும் வீடுகளுக்குள் நிலவும் அதிகார அசமத்துவ உறவுகள் போன்றனவற்றிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**இலங்கையின் சமூகபாதுகாப்பு கொள்கைகள்**

ஆரம்ப வருடங்களில், சமூகப் பாதுகாப்பு தொடர்பான அரச கொள்கை மற்றும் முதலீடானது குறிப்பிடத்தக்க பெறுபேறுகளைக் கொண்டிருந்தது. இலங்கையானது, 1990களில் இலவச கல்வி மற்றும் இலவச மருத்துவம் ஆகிய சர்வஜன சமூகப்பாதுகாப்பில் முதலீடு செய்திருந்தது, அதன்விளைவாக, அதனது தனிநபர் வருமானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் வழமைக்குமாறான அதிகரிப்பினை, மனித அபிவிருத்திச் சுட்டிகளை அடைந்துகொண்டது மட்டுமன்றி அதனைப் பேணக்கூடியதாகவும் இருந்தது. இலங்கையின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், பொதுச்சேவைகளில் பணிக்கமர்த்தப்பட்டோருக்கான கொடுப்பனவுகள்(ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதி), முறைசார் தனியார் துறை (சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, பணிநீக்க ஊதியம் மற்றும் மகப்பேற்று நலன்கள்) மற்றும் முறைசாராத் துறை(தன்னார்வ பங்களிப்புத் திட்டங்கள்) போன்றவற்றினை உள்ளடக்குகின்றன.

இலங்கையானது, 1995இல் சமுர்த்தி(செழிப்பு) திட்டத்தினை ஏழைகளுக்கான சமூக உதவித்திட்டமாக அறிமுகப்படுத்தியது. அது சேமிப்பு மற்றும் கடன் திட்டம், உணவு முத்திரைகளை வழங்கல், ஒரு பணக்கொடுப்பனவு திட்டம், சமூகப் பாதுகாப்பு நிதி மற்றும் போசாக்குத்திட்டம் போன்றவற்றினை உள்ளடக்கியிருந்தது. 2008இல் சமுர்த்திக்கான பொது ஆணையாளர் திணைக்களமானது(DCGS) ஒரு மண்ணெண்ணை உதவித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. 2021இல் சமூகப் பாதுகாப்பிற்குப் பொறுப்பான அமைச்சானது, தம் பணிக்கூற்றில் ‘‘மேம்பட்ட சமூகப்பாதுகாப்பு, வாழ்வாதார உதவி, நுண்-நிதி வசதிகள், தொழில் வாய்ப்புக்கள், தொழில்வாய்ப்பினை அடிப்படையாகக்கொண்ட அறிவு மற்றும் தொழிற்கல்வி போன்றவற்றினை வழங்குவதன்மூலம் நலிவுற்ற சமூகங்களை வலுப்படுத்தல்’’ என விவரித்திருந்தது. இவ்அமைச்சானது, (1) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் (DSD), (2) சௌபாக்யா அபிவிருத்தி பணியகம் (SDB), (3) பிராந்திய அபிவிருத்தி வங்கி(RDB), (4) மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD), (5)இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை(SLSSB), (6) சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவகம் (NISD), (7) கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவகம் (RDTRI), (8) ஆலோசனை பிரிவு மற்றும் அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுறவு(SRMC) போன்றவற்றையும் மேற்பார்வைசெய்துகொண்டிருந்தது.

அண்மைய வருடங்களில், மக்களுக்காக கோரப்பட்ட, மக்களின் போராட்டங்கள் மற்றும் இயக்கங்களினால் வெற்றிகண்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் சந்தைக் கோட்பாடுகள் மற்றும் தனிப்பட்ட அரசியல் இலாபங்களைநோக்கிய அரச கொள்கைகளினால் கட்டமைக்கப்பட்டமுறையில் சிதைக்கப்பட்டுவருகின்றன. சமூகப் பாதுகாப்பிற்கான அரச நிதியானது குறைக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை, திட்டங்கள் குறுகிய அடிப்படையில் வரையறுக்கப்பட்டிருப்பதுடன், பாதுகாப்பு வழங்கப்படவேண்டிய தேவைகளிருக்கின்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ளவில்லை.

சமூகப் பாதுகாப்புத்திட்டங்களை தனியார்மயப்படுத்துவதற்கான அழுத்தங்களும் இத்திட்டங்களின் வினைத்திறனை வலுவிழக்கச்செய்துள்ளன. உதாரணமாக, ஊழியர் சேமலாப நிதியில் பங்குச்சந்தைகளில் முதலீடு செய்வதானது, நட்டத்தினை ஏற்படுத்தியுள்ளது அத்துடன் சமுர்த்தி பணக்கொடுப்பனவினை தனியார் வங்கிகளினூடாக விநியோகிப்பதற்காக அண்மைக்காலங்களில் கொடுக்கப்பட்ட அழுத்தமானது, CRIB systemஇலிருள்ளவர்கள் மிகவும் தேவையான ஆதரவினைப் பெறுவதிலிருந்து அவர்களை புறக்கணிக்கும் அபாயத்தினைக் கொண்டிருக்கின்றது. சமூகப் பாதுகாப்பிற்கான இலக்குவைக்கப்பட்ட அணுகுமுறையானது, தெரிவுமேற்கொள்ளப்படும்போது சமூகங்களையும், தனிநபர்களையும் பாரபட்சப்படுத்துவதற்கு நீண்டகாலமாக அரசியல்வாதிகளினாலும், அதிகாரிகளினாலும் தவறாகப்பயன்படுத்தப்பட்டுவருகின்றது. மேலும், இலக்குவைக்கப்பட்ட திட்டங்கள் பெரும்பாலும் மிகவும் நலிவுற்றவர்கள் உதவியினைப் பெறுவதிலிருந்து அவர்களைப் புறந்தள்ளுகின்றது. உதாரணமாக, இலங்கையிலுள்ள 59%ஆன ஏழைச் சிறுவர்கள் சமுர்த்தித்திட்டத்திலிருந்து புறந்தள்ளப்பட்டுள்ளனர்.

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமத்தினால் ஆய்விற்காக நேர்காணல்மேற்கொள்ளப்பட்டோரில் அநேகருக்கு நிதிக்கொடுப்பனவு அல்லது கடன்கள் வழங்கப்படுதல் என்பதற்கு அப்பால் தற்போதிருக்கின்ற சமூகப்பாதுகாப்புத்திட்டத்தில் இருப்பதென்பது அர்த்தமுள்ளதாக இருந்தது. அவர்களில் பெரும்பாலானோர் பெண்களாக இருந்தனர், அவர்கள் அரசசேவைகளுடன் இணைந்திருப்பதுபோன்ற உணர்வு தொடர்பிலும், (தகவல்கள், சிறப்புரிமைகள் மற்றும் நிச்சயமற்றதன்மையினை கையாளக்கூடியதாக இருந்தமையினால் அபாயங்களை எதிர்கொள்வதுதொடர்பான) ஓரளவிற்கு பாதுகாப்பு குறித்தும் பேசினர்.

Most worked in the informal economy. Being on the Samurdhi scheme enabled them to access support during a death, during births, during ill health and also access support by simply being on the list during other unforeseen emergencies such as natural disasters and COVID 19 pandemic. The savings in the Samurdhi bank is the only security for many as they become older and unable to work. Furthermore, being on these schemes was the space for many to realize their citizenship rights to participate in community decision making, build networks of support and access local level state officials

பெரும்பாலானோர் முறைசாராப் பொருளாதாரத்தில் தொழில்புரிந்தனர். சமுர்த்தி திட்டத்தில் இருப்பதானது, இறப்பு, பிறப்பு, நோய்நிலை போன்ற தருணங்களில் ஆதரவினைப் பெற்றுக்கொள்வதனையும்இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கோவிட் பெருந்தொற்று போன்ற எதிர்வுகூறமுடியாத ஏனைய அவசரகாலநிலைமைகளில், பட்டியலில் இருப்பதன்காரணமாகவே வழங்கப்படும் ஆதரவினைப் பெற்றுக்கொள்வதனையும் இயலச் செய்திருக்கின்றது. பலருக்கு தமக்கு வயதுமுதிரும்போது, தொழில்செய்ய முடியாத காலத்தில் சமுர்த்தி வங்கியிலுள்ள சேமிப்பே அவர்களுக்குள்ள ஒரே பாதுகாப்பாகும். மேலும், பலருக்கு இத்திட்டத்திலிருப்பதானது, சமூகமாக முடிவுகளை மேற்கொள்ளுதல், ஆதரவு வலையமைப்புக்களை கட்டியெழுப்புதல் மற்றும் உள்ளூர்மட்ட அரச அதிகாரிகளை அணுகுதல் போன்றவற்றில் பங்குபற்றுவதற்கு தமக்கிருக்கும் குடியுரிமைகளை அனுபவிப்பதற்கான வெளியாக அமைகின்றது.

**சமூகப் பாதுகாப்புத்திட்டம் பதில்நடவடிக்கை மேற்கொள்ளவேண்டிய சூழமைவு**

1930இற்குப்பின் மிகவும்மோசமான பொருளாதார நெருக்கடியினை இலங்கை எதிர்கொண்டிருக்கின்றது என்பதையும், அநேகமான இலங்கையர்கள்மீதான அதன் மிகமோசமான தாக்கம் போன்றவற்றினையும் கருத்தில்கொள்ளும்போது, இந்த பொருளாதார நெருக்கடி எவ்வாறு சமூகங்களைப் பாதித்திருக்கின்றது என்பதற்கு எந்தவொரு சமூகப் பாதுகாப்புத்திட்டமும் பதிலிறுக்கவேண்டும்.

**அதிகளவிலான இலங்கையர்கள் வறுமையில் வீழ்ந்திருக்கின்றார்கள்** - வறுமையின் விகிதம் இருமடங்காகியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, கடந்த இரண்டுவருடங்களில் (2021-2022) அசமத்துவமும் பரவலடைந்திருக்கின்றது. பெருந்தொற்றின் விளைவாக, மேலதிகமாக 500,000 பேர் 'வறியவர்களாகியுள்ளனர்'. அண்ணளவாக, 5.6 மில்லியன் மக்கள் அல்லது சனத்தொகையின் 23%ஆனோர், கடந்தசில வருடங்களில் வறுமைக்குள் வீழ்ந்துள்ளனர், அவர்களில் அநேகர் பெண்களாவர். 2019இல், அண்ணளவாக, 1.9 மில்லியன் மக்கள் (சனத்தொகையின் 9% ஆனோர்) சமுர்த்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்திற்காக அண்மையில் முடிவடைந்த உலகவங்கி மற்றும் நலன்புரி நன்மைகள் சபை ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்ட சரிபார்க்கும் செயன்முறையானது, 3.7 மில்லியன் மக்களை அல்லது சனத்தொகையின் 14% ஆனோரை மட்டுமே உள்ளடக்கியதுடன், ஏற்கனவே நலன்புரித்திட்ட பட்டியலிலுள்ள பலரையும் நீக்குவதற்கு முயற்சிக்கின்றது.

**உணவுப்பாதுகாப்பின்மை தொடர்பான தீவிர நெருக்கடி** - இலங்கையில் மூன்றில் ஒரு குடும்பம் உணவுப்பாதுகாப்பற்றதாக உள்ளது. கிராமிய மற்றும் நகர்ப்புற ஏழைக்குடும்பங்கள் சிலநேர உணவுகளை தவிர்க்கின்றன, போசாக்கான உணவு உள்ளெடுப்பதனை குறைக்கின்றன, ஒரு நேர உணவினை தேனீர் மூலம் மாற்றீடு செய்கின்றன, எந்த பிள்ளை/குடும்ப உறுப்பினருக்கு சீரான உணவினை வழங்கலாம் என்பதனை தேர்வுசெய்கின்றன. 2021இல் முறையாகத்திட்டமிடாமல் மேற்கொள்ளப்பட்ட உரம் மீதான தடை மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக உற்பத்திச்செலவு அதிகரித்தமை ஆகியன உணவு உற்பத்தியில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியதுடன், உணவுக் கட்டமைப்பினை மிகவும் நலிவுறச்செய்தது.

**அடிப்படையான, கௌரவமான பாதுகாப்பான வாழ்க்கை அடைந்துகொள்ள முடியாததொன்றாகியது** – மக்களுக்கு வழங்கப்படும் ஊதியங்கள் உயர்த்தப்படாத சூழமைவில், குறிப்பாக கட்டமைக்கப்படாத/ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் தொழில்களை இழப்பதனால் மக்களின் வாழ்க்கை பின்வருவனவற்றினாலும் பாதிக்கப்படுகின்றது

**சிக்கனப்படுத்தல்** - பொருளாதார நெருக்கடிக்கான மீட்புத்திட்டத்தின் ஒரு பகுதியாக கடுமையான சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதிகரிக்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது சாதாரண மக்களினால் சுமக்கப்படுகின்றது, மின்சாரம் மற்றும் நீருக்கான மானியங்களை நீக்குதல், அதிகரித்த போக்குவரத்து, மருந்து, மண்ணெண்ணை, உரம், கிருமிநாசினிகள் மற்றும் மிருகங்களின் தீனிகளின் செலவு, மற்றும் அடிப்படையான உணவுப்பொருட்களின் விலையானது சடுதியாக அதிகரித்தமை போன்றவையே இலங்கையிலுள்ள தற்போதைய யதார்த்தமாக இருக்கின்றது.

**மின்சாரம்:** கடந்த 9 வருடங்களுக்குப் பிறகு இலங்கை மின்சாரசபையானது ஆகஸ்ட் 2022இல் முதன்முறையாக மின்சாரக் கட்டணங்களை உயர்த்தியதானது, மாதம் 60 அலகுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்தும் 3.14 மில்லியன் குடும்பங்களுக்கு 211%ஆன மின்சாரக்கட்டண அதிகரிப்பினை

ஏற்படுத்தியது. கட்டணங்களைச் செலுத்தமுடியாத குடும்பங்கள் அல்லது முன்னதாகவே கட்டண நிலுவையினைக் கொண்டிருந்தவர்கள் மின்சாரத்துண்டிப்பினை எதிர்கொண்டனர். அத்துடன், இவ் அடிப்படைத் தேவையினைத் துண்டிக்கப்போவதாக அச்சுறுத்தும் கடிதங்களும் அறிவித்தல்களும் விநியோகிக்கப்பட்டன. மின்சாரக்கட்டணம் நிலுவையிருக்கும்போது சில குடும்பங்கள் நீருக்கான அச்சுறுத்தலினையும் எதிர்கொண்டன. அரசானது, பொருளாதார மீட்பு குறித்த தேசியசொல்லாடலினை ஏழைச்சமூகங்களுக்கு எதிராக அவர்களுக்கான அடிப்படைச் சேவைகளுக்கான அணுகுதலினை ஆயுதமாக்குவதன்மூலம் பயன்படுத்துவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

**குடும்பங்கள், சிறியளவிலான விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான எரிபொருள்:** 2023இல் மண்ணெண்ணையின் விலையானது ரூ.87இலிருந்து ரூ.340ஆக உயர்ந்துள்ளதானது, கிராமிய மற்றும் நகர்ப்புற ஏழைக்குடும்பங்களை வலுவிழக்கச்செய்யும்வகையிலான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. மண்ணெண்ணைப் பற்றாக்குறை மற்றும் விலைஉயர்வு காரணமாக மீனவர்கள் வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு படகினைப் பயன்படுத்தமுடியவில்லை. சிறிய மட்டத்தில் விவசாயத்திலீடுபடும் விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கான நீரினை இறைப்பதற்கு நீர்ப்பம்பிகளில் தங்கியிருக்கின்றார்கள். மண்ணெண்ணையின் விலை அதிகரிப்பானது, விவசாயிகள் உற்பத்திகளில் ஈடுபடுவதனைத்தடுப்பதன்மூலம், உணவுப்பாதுகாப்பிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

**அதிகரித்த கடன்சுமை:** பொருளாதார நெருக்கடி தாக்கியபோது, அரசாங்கமானது வட்டிவீதத்தினை இருமடங்காக அதிகரித்தமையானது, குடும்பங்களின் கடன்சுமையினை அதிகரித்ததுடன், விவசாயிகள், மீன்பிடியிலீடுபடுபவர்கள் மற்றும் சிறியதர வர்த்தகர்கள் போன்றோர் கடனினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மையினையும் குறைத்தது. அதிகரித்த பணவீக்கத்தின்போது, உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைக் கொடுப்பனவு போன்ற அடிப்படையான விடயங்களில் செலவுகளை மேற்கொள்வதற்கு அதிகளவிலான குடும்பங்கள் கடன்வாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். பெருந்தொற்றுக்கு முன்னர் குடும்பங்களின் கடன்கள் பாரிய பிரச்சினையாக இருந்தது, ஒழுங்குபடுத்தப்படாத நுண்கடன் செயற்பாடுகளின் மூலம் மக்கள் மிகவும் ஆழமான கடனில் வீழ்கின்றனர்.

**ஊதியம் வழங்கப்படாத பராமரிப்புபணி:** பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பானது குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது, குறிப்பாக, பராமரிப்புபணியில் அவர்களின் பங்களிப்பானது குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது, எனவே, ஊதியமற்ற உழைப்பில் ஈடுபடும் பெண்களை மீட்பதற்கு எந்தவொரு சமூக பாதுகாப்பும் இல்லை. பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகரித்த ஊதியமற்ற பராமரிப்பு பணியின் சுமைக்கான சமூக பாதுகாப்பு பதில்நடவடிக்கைகள் எதுவும் இல்லை. சக்தி, உணவு, மருந்துகளின் அதிகரித்துவரும் விலை, தொழில் மற்றும் வருமானமின்மை போன்றவற்றுடன் பெண்கள் மேலும் மேலும் பராமரிப்பு பணியின் சுமையினை எடுத்துக்கொள்வதுடன், குடும்பங்கள் இதனைச் சமாளிப்பதற்கும் உதவுகின்றனர்.

**மாற்றுத்திறன்:** குடும்ப வருமான மற்றும் செலவுக் கருத்தாய்வானது(2019), சனத்தொகையின் 5 வயதிற்கு மேற்பட்ட 4.4% ஆனோர் மாற்றுத்திறனுடன் வாழ்வதாகக் காட்டியிருந்தது, அத்துடன் பெண்கள் மற்றும் சிறுமியரிடையே மாற்றுத்திறனானது அதிகளவில் காணப்பட்டது. இது அண்ணளவாக, 959,200 நபர்களை அண்மித்திருந்தது. ஆயினும், அரசாங்கத்தினால் அஸ்வெசும திட்டத்திற்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, மாற்றுத்திறனாளி நலனைப் பெற்றுக்கொள்ளவிருப்பவர்களின் எண்ணிக்கையானது, 72,000 நபர்களாகவே இருக்கின்றது.

**முன்னெப்போதுமில்லாத வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை போன்றவற்றிற்கான அரசாங்கத்தின் பதில்நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை மற்றும் மக்கள் மேலும் அபாயத்தில் வீழ்தல்**

கோவிட் -19 பெருந்தொற்றின்போது, இலங்கையானது, தெற்காசியாவிலேயே மிகவும் குறைந்தளவில் சமூகப்பாதுகாப்பிற்கு செலவுசெய்திருந்தது. மேலும், பெருந்தொற்று மற்றும் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களினை எதிர்கொள்ளும் நிலையில் இலங்கை அரசாங்கமானது, சமூகப்பாதுகாப்புக் கொள்கையொன்றினை உருவாக்குவதற்குத் தவறியுள்ளது. சர்வதேச நாணய நிதியமானது, 2022இல் சமூகப்பாதுகாப்புத்திட்டங்களுக்கான செலவு மொத்த தேசிய உற்பத்தியின் 0.6% மட்டுமே இருந்தது எனவும், 2023இலும் இப்படியே பேணப்படும் எனவும் அறிக்கையிட்டிருந்தது. சமூகப்பாதுகாப்பு தொடர்பில் 2020இல் (பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முன்னர்) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுடன் ஒப்பீடுசெய்கையில் அரசாங்கம் சமூகப்பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளும் செலவானது பாரியளவில் போதாமையுடையதாகக் காணப்படுகின்றது. இக்கற்கைகள், இலங்கையில் வயதுமுதிர்ந்தோருக்கான சமூகப்பாதுகாப்புத் தேவையானது (வயதுமுதிர்ந்தோர்

ஓய்வூதியத்திற்காக உள்ளூர் தேசிய மொத்த உற்பத்தியின் 0.86%) மற்றும் அபாயத்திலுள்ள சிறுவர்கள் (சிறுவர் நலன்களுக்காக உள்ளூர் தேசிய மொத்த உற்பத்தியின் 0.36%) மற்றும் மாற்றுத்திறனாளிகள் (உள்ளூர் தேசிய மொத்த உற்பத்தியின் 0.20%) இருப்பதாகக் காட்டியுள்ளது.

ஏப்ரல் மாதம் 21ம் திகதி 2023ம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 2328/13 அறிவித்தலின்படி அராங்கத்தின் பதில்நடவடிக்கையாக, ''அஸ்வெசும நலன்கள் கொடுப்பனவுத் திட்டமானது'' 2023 ஜுலை 1ம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தது. இத்திட்டமானது, நலன்புரி நன்மைகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், உலக வங்கியினால் நிதிப்பங்களிப்புச் செய்யப்படும். இச்சுற்றறிக்கையானது, பின்வருமாறு பயனாளிகளை அடையாளம் காண்கின்றது:

4000,000 குடும்பங்கள்/நபர்கள் மாதம் 2,500/- படி 2023 டிசம்பர் 31ம் திகதி வரை பெற்றுக்கொள்வார்கள். 400,000 குடும்பங்கள்/நபர்கள் மாதம் 5,000/- படி 2024 டிசம்பர் 31ம் திகதி வரை பெற்றுக்கொள்வார்கள். 800,000 குடும்பங்கள்/நபர்கள் மாதம் 8,500/- படி 2023 ஜுலை தொடக்கம் மூன்றுவருடகாலத்திற்கு பெற்றுக்கொள்வார்கள். 400,000 குடும்பங்கள்/நபர்கள் மாதம் 15,000/- படி 2023 ஜுலை தொடக்கம் மூன்றுவருடகாலத்திற்கு பெற்றுக்கொள்வார்கள்.

ஒரு குடும்பத்தில் இருவர் மட்டும் அல்லது இருவரைவிடக் குறைந்தவர்கள் இருப்பின்,அவர்கள் ஒதுக்கப்பட்ட தொகையின் அரைவாசியினைப் பெற்றுக்கொள்வர். கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணையானது அரசாங்கத்தின் பதில்நடவடிக்கைகளிலுள்ள போதாமைகளை எடுத்துக்காட்டுகின்றது.

**நாட்டின் சூழமைவு**

2021 மற்றும் 2022இற்கிடையில் வறுமையானது இருமடங்காகியுள்ளது. 2022ம் ஆண்டின் இறுதியில், மேலதிகமாக 2.6 மில்லியன் மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அதேவேளை, பலவருடமாக 1.9 மில்லியன் மக்களே சமுர்த்தித் திட்டத்தில் இருந்து வருகின்றார்கள். வறுமையானது கிராமிய சமூகங்கள் மத்தியிலும் (10 நபர்களில் 8 பேர்) மலையக சமூகங்கள் மத்தியில்(இரு நபர்களில் ஒருவர்) தீவிரமாகக் காணப்படுவதாக அறியப்படுகின்றது. நகர்ப்புற ஏழைச்சமூகங்கள் வறுமைக்கான அதிகரித்த நலிவுற்ற நிலையிலிருப்பதாக அடையாளங்காணப்படுகின்றனர்.

வருமான பாதுகாப்பின்மை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை – வருமானம் அதேயளவில் காணப்படுகின்றது அல்லது குறைந்திருக்கின்றது என்பதனைக் கருத்தில்கொள்கையில், தொழிலாளர்களின் கொள்வனவு மேற்கொள்ளும் உண்மையான திறனானது, 40% தொடக்கம் 50%இனால் குறைவடைந்திருக்கின்றது. குடும்பங்கள் நிவாரணங்களற்றமுறையில் கடனில் உள்ளன. காவுகொள்ளும் நுண்கடன்கள் அதிகரித்தவண்ணமுள்ளன.

உணவுப் பாதுகாப்பின்மை. இலங்கையிலுள்ள மூன்றில் ஒரு குடும்பம் உணவுப்பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது.

**அரசாங்கத்தின் சில பதில்நடவடிக்கைகளின் போதாமை**

2023 டிசம்பர் தொடக்கம் பயனாளிகளின் எண்ணிக்கையினைக் குறைக்கும் திட்டத்துடன், நலன்புரி நன்மைகள் சபையின் அஸ்வெசும திட்டத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கையானது முன்னரைப்போலவே அதேயளவாகக் காணப்படுகின்றது. இச்சுற்றறிக்கையின்படி, இந்த வருடத்தின் இறுதிப்பகுதிவரை இத்திட்டமானது, 2 மில்லியன் மக்களையும் 2024 மார்ச் வரை 1.6 மில்லியன் மக்களையும், அதன்பின் 1.2 மில்லியன் மக்களையும் மட்டுமே சென்றடையும். இவ் வரலாற்றுரீதியாக புதிதாக நலிவுற்ற இச்சனத்தொகைக்கான நலன்புரி நன்மைகள் தொடர்பில் கவனஞ்செலுத்துவதற்கான எந்தவொரு விசேட முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. வறுமைக்குள்ளிருந்து வெளிவர முயற்சிக்கையில் சொத்துக்களை வைத்திருக்கும் மக்களையும் பயன்படுத்தப்படுகின்ற அளவுகோல்கள் தண்டிப்பதாகத் தோன்றுகின்றன.

எந்தவொரு அர்த்தமுள்ள பதில்நடவடிக்கையும் வருவதாக இல்லை. பதிலாக, 2023 பெப்ரவரியில் உணவின் விலையானது(CCPI based) 54.4% வரை உயர்ந்திருக்கின்றது. அநேகமான பொருட்களின் விலையானது 60%இனால் அதிகரித்திருக்கின்றது. பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது, 7%இனாலும், 30-60 அலகுகள் வரை பாவனைசெய்யும் வீடுகளுக்கான மின்சாரக்கட்டணமானது, 200%இனாலும்

அதிகரித்திருக்கின்றது. குடும்பங்களுக்கான எரிபொருள் (மண்ணெண்ணை) செலவானது, 74%இனாலும் அதிகரித்திருக்கின்றது.

நுண்கடன்களின் காரணமாக கடனுக்குள் தள்ளப்பட்ட குடும்பங்களால் மீண்டுவர முடியவில்லை. பலர் உயிர்வாழ்வதற்காக தம்முடைய சொத்துக்களை, குறிப்பாக தங்கத்தினை இழந்திருப்பதாக அறிக்கையிடுகின்றனர்.

ஒரு வருடத்திற்கும் மேலாக உணவுப்பாதுகாப்பின்மையினை எதிர்கொள்வதற்கு எந்தவித திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படவில்லை. எந்தவொரு உணவு விநியோகத்திட்டமும், அரசினால் அனுசரணையளிக்கப்படுகின்ற பாடசாலை மதியநேர உணவுத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. போசாக்கின்மை மற்றும் பாடசாலைகளில் சிறுவர்கள் மயங்கி வீழ்தல் போன்றன தொடர்பான அறிக்கைகள் வெளிவந்த பின்பும் பொருளாதார நெருக்கடியின் ஒரு வருடத்தில், அரசாங்கமானது, இருதரப்பு ஆதரவுடன், பாடசாலை மதிய நேர உணவுத்திட்டத்தினை 1.2 மில்லியனிலிருந்து 2 மில்லியனுக்கு உயர்த்துவதாக வாக்குறுதியளித்தது.

சம்பவக் கற்கைகள்

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாத குழுமமானது, 2023 ஜனவரி காலப்பகுதியில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள 15 நபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட விரிவான நேர்காணல்களினூடாக செழிப்பான விவரணங்களுடன் ஆவணப்படுத்தலை உள்ளடக்கிய ஒரு பண்புசார் கற்கையினை மேற்கொண்டிருந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தொழில்புரியும் ஏழைக்குடும்பங்களின் அனுபவங்களைப் பதிவுசெய்வதே இதன் நோக்கமாக இருந்தது. இலங்கையில் மிகவேகமாக நிகழ்ந்துவரும் சமூகப்பாதுகாப்புதொடர்பான சூழமைவில் வெளிவந்த ஊடக அறிக்கைகள் மற்றும் இலக்கியத்திறனாய்வு போன்றவற்றின்மூலம் இத்தரவுகள் குறைநிரப்பப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியின் தாக்கம் மற்றும் சமூகப்பாதுகாப்பிற்கான(பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தால்) அரச நடவடிக்கைகள் தீவிரமான பால்நிலைப்படுத்தப்பட்டவை என்பது தெளிவாகின்றது. சில சம்பவக்கற்கைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

அனிஷா விவி

அனிஷா விவி(45) மட்டக்களப்பில் வாழ்கின்றார், பாய் இழைப்பதன் மூலம் வாழ்க்கை நடாத்தி வருகின்றார். யுத்தகாலத்தின்போது அவரது குடும்பம் பல இடப்பெயர்வுகளை சந்தித்ததுடன் பல சொத்துக்களையும் இழந்தது. அவரது வறுமைநிலையின் காரணமாக, 2001 தொடக்கம் 2020 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் அவர் சமுர்த்தித்திட்டத்திலும், PMA திட்டங்களிலும் இருந்தார். ஜூன் 2020ம் ஆண்டு அவர் ஒரு இராணுவத்திலிருந்த ஒருவரைத் திருமணம் செய்துகொண்டார், இதன்காரணமாக அவரது சமுர்த்தி மற்றும் PMA திட்டம் உடனடியாக நிறுத்தப்பட்டது. அவர் திருமணம் செய்த பின்பு தீவிரமான வீட்டுவன்முறையினை எதிர்கொண்டார், பின்னர் அவரது கணவனால் கைவிடப்பட்டார். தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழலில், பாய் இழைப்பதற்கான பன்னினைப் பெற்றுக்கொள்வதற்கான போக்குவரத்து செலவு அவருக்கு கட்டுப்படியானதாக இல்லை. அவர் தனது பிள்ளைகளுடன் தனியாக வாழ்ந்து வருகின்றார். அவர் தனது சூழ்நிலை தொடர்பில் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அதிகாரிகளுக்கு அறியப்படுத்தியிருக்கின்றார், ஆயினும், இதுவரை அவர் அத்திட்டங்களுக்குள் உள்வாங்கப்படவில்லை.

விஜயா

விஜயாவும் அவரது குடும்பமும் யுத்த காலத்தின்போது சண்டையிடும் விடுதலைப்புலிகள் மற்றும் இராணுவத்திற்கிடையில் வாழ்க்கையினை நடாத்திச்செல்வதற்கு மிகவும் போராடினர். யுத்தத்தின் காரணமாக அவர் பாடசாலையிலிருந்து இடைவிலகினார். அவருக்கு 14 வயதாயிருக்கும்போது அவர் விடுதலைப்புலிகளினால் கட்டாய ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டார். யுத்தத்தின்போது அவரே மிகவும் மோசமான காயங்களுக்கு ஆளானார். இப்போதும் அவரது உடலில் shrapnel pieces உண்டு, முகத்திலும் பாரிய காயம் ஒன்று உள்ளது. சரிசெய்யப்பட முடியாத அளவிற்கு அவரது ஒரு காதும் கண்ணும் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தத்திற்குப்பின்னான காலப்பகுதியில் விஜயா வீடு திரும்பியபோது, பாதுகாப்புப் படை மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு போன்றவற்றிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்காக அவரது குடும்பம் ஒரு திருமணத்தினை ஏற்பாடு செய்தனர். அந்த மனிதன் ஏற்கனவே திருமணமானவர் என்பதை பின்னர் அவர் கண்டுபிடித்தார். அவரது திருமண வாழ்க்கை அவருக்கு வன்முறையான ஒரு கனவாக

இருந்தது. அவரது திருமணத்தின்மூலம் அவருக்கு ஒரு மகன் உள்ளார். இறுதியாக வன்முறையின் காரணமாக அந்த மனிதனைவிட்டு அவர் பிரிந்தார். ஒரு பிள்ளையுடன் இருக்கும் தனித்துவாழும் பெண்ணாக தனது ஊரிலேயே பல பாரபட்சங்களுக்கு விஜயா முகங்கொடுத்துள்ளார். அவர் தீவிரமான மாற்றுத்திறனுடன் வாழும்போதும் அவர் மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளவில்லை. அரசாங்க அதிகாரிகள் அவருக்கு ஒரு கண் மட்டுமே தெரியாது, ஒரு காது மட்டுமே கேட்காது அதனால் அக்கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் தகுதிபெறவில்லை எனக்கூறினர். அவர் தனது மகனை வளர்ப்பதற்காக ஒரு வீட்டுப்பணிப்பெண்ணாக வேலைசெய்கின்றார்.

கமல்

கமலுக்கு (58) பிறப்பிலிருந்து போலியோ உள்ளது, அதனால் கொழும்பில் சீட்டுக்களை(லொத்தர்) விற்பதன்மூலம் வாழ்ந்து வருகின்றார். அவர் ஒருபோதும் பாடசாலைக்குச் சென்றதில்லை. அவர் ஒவ்வொரு மாதமும் மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவான 5000/-இனைப் பெற்றுக்கொள்கின்றார். அவர் தொழில்புரிவதற்கு அவரது மோட்டார் சைக்கிள் மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. அவரது மோட்டார் சைக்கிள் பழுதுபடும்போது அதனைச் சீர்செய்வதற்காக தனது உணவிற்கான செலவினை நிறுத்திக்கொள்வதே அவருக்கு இருக்கின்ற ஒரே வழியாகும். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அவருக்கு தனது பாவனைக் கட்டணங்களை செலுத்த முடியவில்லை. சில நாட்களில் அவர் எந்தவொரு வருமானத்தையும் பெற்றுக்கொள்வதில்லை.

குமாரி

குமாரி (70), தனது வீட்டிலேயே ஒரு சில்லறைக்கடையினை நடாத்தி வருகின்றார். அவர் ஏதாவது ஒன்றையாவது பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையில் சமுர்த்தி மற்றும் முதியோர் கொடுப்பனவிற்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார். அவர் 5 தொடக்கம் 6 தடவைகள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார். அவர் மீண்டும் 2020ம் ஆண்டு எந்தவொரு கொடுப்பனவினதும் பயனாளியாக இருப்பதென்பதற்கு அப்பால் வழங்கப்பட்ட 5000 ரூபாயினைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தார். ஆனால் அவருக்கு அது வழங்கப்படவில்லை. டிசம்பர் 2022இல் அவர் இறுதி விண்ணப்பத்தினை சமர்ப்பித்தபோது, கிராமசேவையாளர் ஜனவரி 2023இலிருந்து அவர் மாதாந்த கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனக்கூறியிருந்தார். ஆனால் அவர் இப்போதும் காத்துக்கொண்டிருக்கின்றார். அவர் தனது சகோதரியுடன் வாழ்வதனால் எந்தவொரு அரச உதவியினையும் பெற்றுக்கொள்வதற்கான அவரது உரிமை கருத்தில்கொள்ளப்படவில்லை.

நோனா

80 வயதான நோனா தனது மகளுடன் கொழும்பில் வசித்து வருகின்றார். மழைக்காலத்தின்போது வெள்ளம் வருவது வழமை, ஏனென்றால் அவரது வீட்டிற்குப் பின்னால் ஓடும் கால்வாயானது எப்போதும் பெருக்கெடுத்து மூன்றடியளவிலான வெள்ளத்தினை ஏற்படுத்தும். வெள்ளத்தின்போது அவர்கள் வழமையாக அருகிலுள்ள பாடசாலைக்கு இடம்மாறுவார்கள். அவர் ஜனசவியவினைப் பெற்றுக்கொள்பவராக இருந்தார், தற்போது சமுர்த்தியினைப் பெற்றுக்கொள்பவராக இருக்கின்றார். ஆயினும், சமுர்த்தி வங்கியானது ஒரு முச்சக்கரவண்டி மூலம் 20 நிமிடங்களுக்கு பயணித்துச்செல்ல வேண்டிய தூரத்தில் உள்ளது. அவரிடம் பணமில்லாதபோது, அவர் கால்நடையிலேயே வங்கிக்குச் செல்வார். சிலவேளைகளில் சனநெருக்கடியாகவுள்ள சமயங்களில் அவர் காலை 10.00 மணிதொடக்கம் மாலை 3.00 மணிவரை தனது கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்கு காத்திருக்கவேண்டியிருக்கும். பொருளாதார நெருக்கடியின் காரணமாக, அவர் விறகு அடுப்பிற்கு மாறியுள்ளதுடன், தனது உணவையும் மருந்துகளையும் குறைத்துக் கொண்டுள்ளார். பாவனைக் கட்டணங்கள் அவருக்கு கட்டுப்படியாகவில்லை என்பதனால் நகைகளை அடகுவைத்து வாழ்ந்து வருகின்றார்.

ஒரு முழுமையான கொள்கையானது, ஊதியங்களின் போதாமை, பணவீக்கத்தின் தாக்கம், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் உணவுப்பாதுகாப்பின்மையின் தாக்கம், இலவசமான சுகாதாரம் மற்றும் கல்வியினை பெற்றுக்கொள்வதிலுள்ள சவால்கள் மற்றும் வறுமையினை எதிர்கொள்ளும் மக்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற அனைத்திற்கும் பதில்நடவடிக்கையினை உள்ளடக்கியதாயிருக்க வேண்டும்.

பரிந்துரைகள்

உடனடி உதவி

**பணக்கொடுப்பனவுப் பயனாளிகளின் எண்ணிக்கையானது விரிவுபடுத்தப்பட வேண்டும்:** தற்போதைய சூழமைவானது பயனாளிகளின் எண்ணிக்கையினை விரிவுபடுத்துவதனை வேண்டிநிற்கின்றது, குறைப்பதனை அல்ல: வறுமை அதிகரிப்பதென்பது, உதவி தேவைப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதென்பதாகும். கிராமிய, மலையக மற்றும் நகர்ப்புறத்திலுள்ள வருமானம் குறைந்த பகுதிகளிலுள்ளோரின் ஆலோசனைகளைக் கேட்டறிந்து, அவர்களுக்கான ஆதரவினை வழங்கவேண்டும். வறுமை இருமடங்காகியுள்ளது என்பதனைக் கருத்தில்கொள்ளும்போது, அந்தநேரத்தில் சமூகப்பாதுகாப்பிற்குத் தகுதிபெறும் மக்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கான எவ்விதமான தர்க்கரீதியான அடிப்படையும் இல்லை.

**உணவுப்பாதுகாப்பின்மை எதிர்கொள்ளப்படவேண்டும்:** உணவுப்பொருட்களின் விலை, வாழ்க்கைச்செலவு மற்றும் உணவுப்பொருட்கள் கிடைக்கக்கூடியதன்மை போன்றவற்றின் விளைவே உணவுப்பாதுகாப்பின்மையாகும். பணக்கொடுப்பனவானது, உணவு விநியோகம், பாடசாலை உணவுத்திட்டங்கள், கட்டுப்படியாகக்கூடியவகையில் உணவினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருத்தல் மற்றும் போசாக்கினை மேம்படுத்தும் தகவல்களைப் பரப்புதல் போன்றவற்றின்மூலம் குறைநிரப்பல் செய்யப்படவேண்டும். அனைத்து திட்டங்களும் போசாக்குடைய, நல்ல தரத்தினைக்கொண்ட உணவு விநியோகம் மற்றும் அவை கிடைக்கக்கூடியதன்மையினை உறுதிப்படுத்த வேண்டும். வலயக்கல்வி அலுவலகங்கள், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் கட்டமைப்புக்கள் போன்ற தற்போதிருக்கின்ற உட்கட்டமைப்பானது, அடிப்படையான சொத்துக்கள் அல்லது குடும்பத்தில் ஒரு உறுப்பினர் இலங்கைக்கு வெளியே தொழில்புரிவதென்பது, அக்குடும்பம் உணவு அல்லது போசாக்குதொடர்பில் பாதுகாப்பானதாக இருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்துவதில்லை என்பதனைக் கவனத்திற்கொண்டு, உணவுப்பாதுகாப்பின்மையினை எதிர்கொள்ளும் குடும்பங்களை மதிப்பீடுசெய்வதற்கு ஒருங்கிணைந்த மதிப்பீடுகளை மேற்கொள்வதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**தொழில்வாய்ப்பற்றவர்கள், குறைந்த வருமானத்தினைக் கொண்டிருப்பவர்கள் அல்லது சமூக நலன்புரித்திட்டங்களிலிருப்பவர்களது குடும்பங்கள் மீதான கடன்கள் தொடர்பில் உடனடித்தடை விதித்தல்:** சமுர்த்தியினூடாக வழங்கப்பட்ட கடன்களை சமுர்த்திக்கொடுப்பனவிலிருந்து கழிப்பதனால், சமூகப் பாதுகாப்புத்திட்டமாக சமுர்த்தியினுடைய உண்மையான நோக்கமானது அர்த்தமற்றதாகின்றது. காவுகொள்ளும் நுண்கடன் திட்டங்கள் எதிர்கொள்ளப்படவேண்டும்.

**சர்வஜன சமூகப்பாதுகாப்பிற்கான திட்டம்**

**சமூகப்பாதுகாப்பிற்கான அரச செலவினை அதிகரித்தல்:** சமூகப்பாதுகாப்பு நெருக்கடிக்கு பதில்நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக அரச செலவு அதிகரிக்கப்படவேண்டும். 2010-2020ம் ஆண்டு காலப்பகுதிக்கிடையில் நலன்புரி செலவுகள் ஆண்டிற்கான நிதி செலவின் வீதமாக வீழ்ச்சியடைந்துவருகின்றது, நலன்புரி நன்மைகள் சபை திட்டமானது, சிக்கனப்படுத்தலின்போதான நிதிசார் ஒழுக்கத்திற்கான ஒரு முறையாக வறுமையினை இலக்குவைப்பதனை நியாயப்படுத்துவது மற்றும் சர்வதேச நாணய நிதியமானது நாட்டின் உள்ளூர் தேசிய மொத்த வருமானத்தின் 0.6 வீதத்தினை தொடர்ந்தும் சமூகப்பாதுகாப்பில் செலவுசெய்ய பரிந்துரைப்பதானது, மக்களின் வாழ்க்கைமீதான இந்நெருக்கடியின் தாக்கத்தின் தீவிரத்தன்மையினையும், இது உடனடியாகவும் எதிர்காலத்திலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தினையும் எவ்விதத்திலும் அங்கீகரிக்கவில்லை.

**பராமரிப்பு பணியினை அங்கீகரித்தல்:** சர்வஜன சமூகப்பாதுகாப்பிற்கான திட்டமானது, பராமரிப்பு பணிக்கு பொறுப்பாகவிருக்கின்ற மற்றும் வீட்டு வன்முறை உள்ளடங்கலாக பொருளாதார நெருகடியின் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளின் சுமையினையும் தாங்கும் பெண்களுக்கான ஆதரவினையும் வழங்கவேண்டும். திட்டங்களானவை, இலவசமான பகல்நேர பராமரிப்பு மையங்கள், அரசினால் நடாத்தப்படுகின்ற வேலைநேரங்களில் அல்லது தேவையின்போது முதியோரை விட்டுச்செல்வதற்கான பராமரிப்பு வசதிகள் மற்றும் பெண்களுக்கான மற்றும் அதிகரித்த வன்முறையினையும் துஷ்பிரயோகத்தினையும் எதிர்கொள்பவர்களுக்கான பாதுகாப்பு இல்லங்கள் போன்றவற்றினையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். இத்திட்டங்கள் தொழிலாளர் கொள்கைகளையும் குறைநிரப்பல் மேற்கொள்பவையாக இருக்கவேண்டும்.

**இலங்கையின் இலவச சுகாதாரம் மற்றும் கல்வியில் முதலீடு செய்யவேண்டும்:** இத்துறைகளில் அரச முதலீடுகள் போதாமையுடையவையாக இருந்துவருகின்றன, நெருக்கடியினைக் கருத்திற்கொண்டு அரச வைத்தியசாலைகள் மருந்துகள் பற்றாக்குறை, ஊழியர்கள் இழப்பு மற்றும் சனத்தொகையின் சுகாதார பாதிப்புக்கள் அதிகரிப்பு போன்றவற்றினை அறிக்கையிடுகின்ற இந்நேரத்தில் ஆதரவினை வலுப்படுத்துவது மிகவும் அவசியமானதாகும். நாட்டின் மக்கள்மீதான நீண்டகால முதலீடாக வழங்கப்படும் இச் சர்வஜன

சேவையினை நிலைபேறாகப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் கல்வித்துறைக்கு ஆதரவு தேவையானதாக இருக்கின்றது. இந்நெருக்கடி காலப்பகுதியில் இளம்பிள்ளைகளின் கல்வி மேம்பாடானது பாதிக்கப்படாமல் இருக்கின்றதென்பதனை உறுதிப்படுத்துவதற்கு பாடசாலை இடைவேளை நேர உணவுத்திட்டம் உத்தரவாதமளிக்கப்பட வேண்டும்.

**கௌரவமான ஊதியங்கள், கௌரவமான தொழில் நிபந்தனைகள் மற்றும் பெண்களின் உழைப்பிற்கான சமூகப்பாதுகாப்பு**

**சமூகப்பாதுகாப்புக் கொள்கைகளை குடியுரிமை, தொழில்வாய்ப்பு மற்றும் சமூக-அடிப்படையிலான சிறப்புரிமையாக கட்டமைத்தல்**

**சமூகப்பாதுகாப்பு பயனாளிகளை ஏழைகளாகவும், சோம்பேறிகளாகவும், உற்பத்தித்திறனற்றவர்களாகவும் அரசியல்ரீதியாகவும் பொதுவெளிகளிலும் கட்டமைப்பதனை உடனடியாக நிறுத்துதல்:** சமூகப்பாதுகாப்புத் திட்டங்களை வறுமை மற்றும் அசமத்துவத்தினை எதிர்கொள்வதன்மூலம் இலங்கையில் வாழும் அனைத்து பிரஜைகளுக்குமான பாதுகாப்பினை வழங்கும் குடியுரிமை, தொழில்வாய்ப்பு மற்றும் சமூகத்தினை அடிப்படையாகக்கொண்ட சிறப்புரிமையாக மீள்-கட்டமைப்புச் செய்யவேண்டும். சமூகக்களங்கப்படுத்தல் மற்றும் பாரபட்சத்தினைத் தடுத்தல். சமூகப்பாதுகாப்புப் பயனாளிகளுக்கான மனிதகௌரவத்தினை உறுதிப்படுத்தல். முறைசாரா துறை தொழிலாளர்களாக, பராமரிப்பு பணி வழங்குனர்களாக மற்றும் தொழில்புரியும் மக்களாக பொருளாதாரத்திற்கு அவர்கள் மேற்கொள்ளும் பங்களிப்பினை அங்கீகரித்தல்.

**பெண்களிடம் ஆலோசனை பெறுதல், சமூகப்பாதுகாப்பு பயனாளிகளிடம் ஆலோசனை பெறுதல், நலிவுற்ற குழுக்களிடம் ஆலோசனை பெறுதல்:** வினைத்திறன்மிக்க சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுடன் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான உரையாடல்கள் மூலம் மட்டுமே விருத்திசெய்யப்படமுடியும்.

**சமூகப்பாதுகாப்புத் திட்டங்களின் தகவலறியும் உரிமை மற்றும் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தல்:** பல தொழில்புரியும் மக்களுக்கு எவ்வாறு அல்லது ஏன் தமது சேமிப்புக்கள் பற்றுச்செய்யப்படுகின்றன மற்றும் எவ்வாறு அல்லது ஏன் அவ்வப்போது தமது வங்கிக்கணக்குப் புத்தகத்தில் பற்றுக்கள் காணப்படுகின்றன என்பது தொடர்பில் அறியாதிருக்கின்றனர். ஆயினும், அவர்கள் விளக்கம் கேட்பதானது, சமுர்த்தி உத்தியோகத்தர் அல்லது ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பதிலடியினை அல்லது ஏதேனும் விளைவுகளை சந்திக்க நேரிடலாம் எனும் பயமானது வெளிப்படைத்தன்மையினைக் கோருவதிலிருந்து அவர்களைத் தடைசெய்கின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2018ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீட்டு அறிக்கையில், வலுப்படுத்தல் செயன்முறை தொடர்பில் சமுர்த்திப்பயனாளிகளுக்கு விபரிக்கும் ஒரு முறைமையினை உள்ளடக்கிய உத்தியோகபூர்வ தகவல் கட்டமைப்பு மற்றும் திட்டத்தினுள் சமுர்த்தி பயனாளிகளுக்கு ஏற்படுத்தப்படும் பிரச்சனைகள் தொடர்பில் அடையாளம் காண்பதற்கான நேரடி முறைமை ஆகியவை இருக்கவேண்டும் எனப்பரிந்துரை செய்திருந்தது.

**சமுர்த்தி சேமிப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை:** சமுர்த்தி வங்கியிலுள்ள சேமிப்புக்கள் எவ்வாறு முதலீடுசெய்யப்பட்டுவருகின்றன என்பதனை பொதுமக்கள் அறிந்துகொள்ளக்கூடியவாறு அரசானது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மிகமுக்கியமாக, திட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டபின் தனிநபர் சேமிப்பிற்கு என்ன நடக்கும் என்பது தெரியப்படுத்தப்பட வேண்டும். இத்தெளிவு மற்றும் வெளிப்படைத்தன்மையானது, குழுச்சேமிப்புக்கள் தொடர்பிலும் காணப்பட வேண்டும். மேலும், மக்கள் இத்திட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டபின் கடனைத்திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் தெளிவான தகவல்கள் காணப்படவேண்டும்.

**தரவுகளின் ரகசியத்தன்மையினை/அந்தரங்கத்தினைப் பேணுதல் மற்றும் தரவுகளைப் பாதுகாத்தல்:** அஸ்வெசும திட்டத்தினூடாக 3 மில்லியன் மக்களது தகவல்கள் சேகரிக்கப்பட்டதனால், அரசாங்கமானது, மக்களின் அந்தரங்கத்தினைப் பேணுவதற்கும், தரவுப்பாதுகாப்பிற்கும் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை பொதுவெளியில் மக்களுக்கு கிடைக்கச்செய்யவேண்டும்.

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாத குழுமமானது, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழமைவில் தாம் பணிபுரிகின்ற சமூகங்களின் வாழ்வியல் யதார்த்தங்களினை அடிப்படையாகக்கொண்டு புரிந்துகொள்வதற்கும், பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கும் கொள்கைப் பரிந்துரைகளுக்காக குரல்கொடுக்கவும் என 2022ம் ஆண்டு ஏப்ரலில் நாடுமுழுவதிலுமிருந்து ஒன்றிணைந்த பெண்ணிலைவாத பொருளியலாளர்கள்,

கல்வியறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சட்டத்தரணிகள் போன்றோரை உள்ளடக்கிய குழுமமாகும்.

எமது பணி தொடர்பில் தெரிந்துகொள்ள: www.srilankafeministcollective.org

இன்ஸ்டகிராமில் எம்மைத் தொடர்வதற்கு: @femcollective4economicjustice

உங்களது கருத்துக்களை அனுப்பிவைப்பதற்கு: feministcollectiveforjustice@gmail.com